# ஏப்ரல்- 15- ஞாயிறு

**“ பாவமன்னிப்புப் பெற்றுக்கொள்ள மனம் மாறுங்கள் என எருசலேம் தொடங்கி.......இவற்றிறிகு நீங்கள் சாட்சிகள்” (லூாக். 24:47-48)**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி3 : 13: 15,17 – 19

ஆபிரகாம்,ஈசாக்கு, யாக்கோபு, என்னும் நம் மூதாதையரின் கடவுள் தம் ஊழியர். இயேசுவைப் பெருமைப்படுத்தினார். ஆனால் நீங்கள் அவரைப் புறக்கணித்துப் பிலாத்திடம் ஒப்புவித்துவிட்டீர்கள். அவன் அவருக்கு விடுதலைத் தீர்ப்பு அளிக்க முயன்றபோதும் நீங்கள் அவரை மறுதலித்தீர்கள்.நீங்கள் தூய்மையும் நேர்மையுமானவரை மறுதலித்துக் கொலையாளியை விடுதலை செய்யுமாறு வேண்டிக்கொண்டீர்கள்.வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்.அன்பர்களே, நீங்களும் உங்கள் தலைவர்களும் அறியாமையினாலேயே இப்படிச் செய்துவிட்டீர்கள் என எனக்குத்தெரியும்.ஆனால் கடவுள், தம் மெசியா துன்புறவேண்டும் என்று இறைவாக்கினர் அனைவர் வாயிலாகவும் முன்னறிவித்ததை இவ்வாறு நிறைவேற்றினார்.எனவே உங்கள் பாவங்கள் போக்கப்படும்பொருட்டு மனம்மாறி அவரிடம் திரும்புங்கள்.

**பதில்பாடல் :** உமது முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும் ஆண்டவரே.

## இரண்டாம் வாசகம் : 1 யோவான்2 : 1 – 5

என் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாதிருக்க வேண்டும் என இதை நான் உங்களுக்கு எழுதுகிறேன் ஆயினும் ஒருவர் பாவம் செய்ய நேர்ந்தால் தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார்.நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே நம் பாவங்களுக்கு மட்டும் அல்ல, அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே.அவருடைய கட்டளைகளை நாம் கடைப்பிடித்தால் நாம் அவரை அறிந்து கொண்டோம் என்பது உறுதியாகத் தெரியும்.”அவரை எனக்குத் தெரியும்” எனச் சொல்லிக் கொண்டு அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காதோர் பொய்யர் உண்மை அவர்களிடம் இராது.ஆனால் அவரது வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைவடைகிறது் நாம் அவரோடு இணைந்து இருக்கிறோம் என அதனால் அறிந்துகொள்ளலாம்.

## நற்செய்தி : லூாக்கா 24 : 35 – 48

அக்காலத்தில் சீடர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். சீடர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது இயேசு அவர்கள் நடுவில் நின்று, ”உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று அவர்களை வாழ்த்தினார்.அவர்கள் திகிலுற்று, அச்சம் நிறைந்தவர்களாய், ஓர் ஆவியைக் காண்பதாய் நினைத்தார்கள். அதற்கு அவர், ”நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ஐயம் கொள்ளுகிறீர்கள்? என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், நானே தான். என்னைத் தொட்டுப் பாருங்கள் எனக்கு எலும்பும் சதையும் இருப்பதைக் காண்கிறீர்களே் இவை ஆவிக்குக் கிடையாதே” என்று அவர்களிடம் கூறினார். இப்படிச் சொல்லித் தம் கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.அவர்களோ மகிழ்ச்சி மேலிட்டு, நம்பமுடியாதவர்களாய், வியப்புக்குள்ளாகி இருந்தார்கள். அப்போது அவர் அவர்களிடம், ”உண்பதற்கு இங்கே உங்களிடம் ஏதேனும் உண்டா?” என்று கேட்டார்.அவர்கள் வேக வைத்த மீன்துண்டு ஒன்றை அவரிடம் கொடுத்தார்கள். அதை அவர் எடுத்து அவர்கள்முன் அமர்ந்து உண்டார்.பின்பு அவர் அவர்களைப் பார்த்து, ”மோசேயின் சட்டத்திலும் இறைவாக்கினர் நூல்களிலும் திருப்பாடல்களிலும் என்னைப் பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேற வேண்டும் என்று நான் உங்களோடு இருந்தபோதே உங்களுக்குச் சொல்லியிருந்தேனே” என்றார் அப்போது மறைநூலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களைத் திறந்தார். அவர் அவர்களிடம், ”மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும்,“பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்“ என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்படவேண்டும் என்றும் எழுதியுள்ளது.இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள்“ என்றார்.

**தியானம்:** இறைமன் இயேசு தனது பணிவாழ்விற்கு நீங்களே சாட்சிகள் என்று அன்று தம் சீடர்களைப் பார்த்துக் கேட்ட இயேசு, இன்று திருமுழுக்கின் மூலமாக அவருடைய பிள்ளைகளாக கிறிஸ்தவ மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மையும் அவரது சாட்சிகளாய் வாழ்ந்திட, இன்றைய இறைவார்த்தைகள் மூலமாக எமக்கு அழைப்பு விடுக்கின்றார். முதல் வாசகத்தில் பேதுருவும், யோவானும் மனத்துணிவோடும், மன உறுதியோடும் சாட்சியமளித்ததை நாம் வாசித்தோம். அதனால்தான் கிறிஸ்தவம் கடையெல்லைவரை வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஏனெனில் இயேசுவின் பிரசன்னத்தை அவருடைய சீடர்களால் உணர முடிந்தது. நமது வாழ்விலும் துன்ப துயரங்களிலிருந்தும் நம்மை மீட்டு வழிநடத்திவரும் அவரது பிரசன்னத்தை நாம் புரிந்துகொள்ளாது இருக்கின்றோம். இயேசுக்கிறிஸ்துவின் உடனிருப்பும் அவரது பிரசன்னமும்தான் ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் உண்மையான மகிழ்ச்சியை கொண்டு வரமுடியம். இயேசுவின் பிரசன்னத்தில் வாழும்பொழுது துன்பங்கள் இன்பமாக மாறும், மகிழ்ச்சியும் மனநிறைவும் பெருகும். எனவேதான் எமது பணிவாழ்வானது அன்பு, தாழ்ச்சி, பொறுமை, பகிர்தல் போன்ற நற்பண்புகளை கொண்டவையாக இருக்கட்டும். உறுதிப்பூசுதல் வழியாக தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட நாம் அவரது உடனிருப்பை உணர்ந்து இயேசுவின் சாட்சிகளாக வாழ்வோம். இயேசு தூய ஆவியானவரைப்பறி கூறும் பொழுது அவர் “என்னைப்பற்றி சான்று பகிர்வார்” என்கிறார். தூய ஆவியானவர் மனிதர்களின் உள்ளங்களிலிருந்து செயல்படுபவர். இயேசுவில் நம்பிக்கை வளர்த்து அவரை அன்புசெய்துவாழ வழிகாட்டுபவர். இயேசுவைப் பின்பற்றுபவர்களின் முதன்மையான பணி அவருக்கு சான்று பகிர்வது மட்டுமே.!